20.11.2025

O.S.No. 200/2022

DW1- புஷ்பராஜ் – த/பெ.முத்தையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.11.2025.

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. தபசில் சொத்துக்கள் காலி மனை என்றால் சரிதான்.

2. தபசில் சொத்துக்கள் முழுவதும் கட்டுக்கல் நிறுத்தி முள்வேலி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வேலியை பரமசிவன் தான் அமைத்தார் என்றால் சரிதான்.

4. எனக்கும் வாதிக்கும் 15.06.2022 ம் தேதி பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். வாதி என் மீது 16.06.2022 ம் தேதி அவரின் அனுபவத்தை தடை செய்வதாக குற்றாலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். போலீசார் ஏலத்தில் வாதியின் அப்பா எடுத்ததால் அவரை வைத்துக்கொள்ள வேண்டுமாறு கூறினார்கள்.

5. வாதி வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களை நான் படித்து பார்த்தேன்.

6. வா.சா.ஆ.3 ஆவணத்தின் விவரம் தெரியும் என்றால் சரிதான்.

7. நான் இவ்வழக்கிற்கு எதிர் கோருரிமை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. நான் உரிமை கோரும் சொத்து வேறு, தபசில் சொத்து வேறு என நிரூபிப்பதற்கு ஆணையர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

9. நான் உரிமை கோரும் 21 சென்டிற்கு ஆவணம் ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் அண்ணன் சண்முகவேல் பெயரில் உள்ளது ஆனால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் 21 சென்டிற்கு என் பெயரிலோ மற்ற பிரதிவாதிகள் பெயரிலோ எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல.

10. வாதி சட்டப்படியான அனுபவதாரர் என்றும் அவர் அனுபவத்தை தடை செய்வதற்கு எனக்கு எந்த சட்ட உரிமையும் இல்லை என்றும் எனவே வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.